1972 சனவரி 31]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மதுரை மீனுட்சி அம்மன் கோவில் சுற்றியுள்ள காலி இடத்தை ஒரு பூந்தோட்டம் ஆக்கவும், காலி இடங்களில் கடைகள் அமைக்கவும், ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. ஏனென்றல் கடைகள் அந்த இடத்தில் உள்ள சிற்பங்களை மூடிவிடுகின்றன. அந்தக் கடைகளை வெளியே வைத்தால் ஒரு வகையில் கோவிலுக்கு வருமானம் வருகிறது. மற்ருெரு பக்கத்தில் கோவிலைப் பாதுகாக்கும் வகையில் கோயிலைச் சுற்றிலும் கடைகள் கட்டுவது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, மதுரை மீனுட்சி அம்மன் கோவில் தென் இந்தியாவிலேயே புராதன கோவில் என்று தெரிந்திருந்தும் அரசு அதைச் சுற்றியுள்ள அநேக பாகங்களில் பூந்தோட்டங்கள் ஆக மாற்றுவது பெரிய புனிதத் தன்மையை (ஸாங்க்டிடி) பாதிக்கும் வகையில் இருப்பதால் இந்தக் கொள்கையை அரசு கைவிட முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோவிலுக்குள்ளே கடைகளை வைக்காமல் வெளியே வைக்கும் காரணத்தால் கோவிலின் புனிதத்தன்மை எந்த வகையிலும் கெடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில் தேர்கள் கட்ட பயிற்சி

* 210 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோவில்களில் திருத்தேர்கள் செய்வதற்கான பயிற்சிப் பள்ளிகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) ஒற்றிவைப்புத் தீர்மானம்

போலீஸ் காவலில் மருத்துவ மனையில் இருந்த தொழிலாளர் தலைவர்கள் சிலரை மத்திய அமைச்சர் திரு. கே. ஆர். கணேஷ் சென்று பார்த்ததாகச் சொல்லப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. எ. வகாப் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோருகிறேன் என்ற ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

" 28-1-72-ஆம் நாளன்று ஆவடி டாங்கி தொழிற்சாலை முன்னல் நடந்த கலகத்தின் விளைவாகப் போலீசாரும் தொழிலாளர்களும் காயமடைந்ததாகவும் கலகம் விளைவித்த தொழிலாளர் தலைவர்கள் திரு. குசேலர், திரு. சிந்தன்